Leprosy Centre, Tiruchengode

* 168 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that financial assistance is given by the Government to the Leprosy Centre at Gandhi Ashram at Tiruchengode during recent years; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

ஈரோடு மருத்துவ மனையில் வழங்கப்பட்ட பால்

* 169. வினு—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972 ஜூன் மாத மத்தியில் ஈரோடு அரசு மருத்துவ மனையில் வழங்கப்பட்ட பாலைக் குடித்ததால் 100-க்கும் அதிகமானவர்கள் வாந்தி யெடுத்தது உண்மையா?

(இ) கெட்டுப்போன பாலை வழங்கியவர் பேரில் நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) 1—6—1972-ம் நாளிலிருந்து இந்த மருத்துவ மனைக்கு ஈரோடு கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியம் பால் வழங்குகிறது. அதற்குமுன் இரண்டு திங்கள் தனிப்பட்ட குத்தகைக்காரர் ஒருவரால் பால் வழங்கப்பட்டு வந்தது. 1—6—72-ம் நாளிலிருந்து மருத்துவ மனைக்குப் பால் அவர் வழங்கா விட்டாலும், மருத்துவ மனைக்கு வேண்டிய கீரைகள், காய்கறிகள், விறகு போன்றவைகளைக் குத்தகையின் அடிப்படையில் அவர்தான் வழங்கி வருகிறுர். 11—6—72-ம் நாள் ஈரோடு பால் வழங்கு ஒன்றியம் வழங்கிய பாலைக் காய்ச்சி நோயாளிகளுக்குக் கொடுத்ததில் அவர்களில் 102 பேர் வாந்தி எடுத்தனர். உடனே அவர்களுக்குத் தகுந்த சிகிச்சையளிக்கப்பட்டது. அவர்கள் எல்லோரும் குணமடைந்து மருத்துவ மனையிலிருந்து அனுப்பப்பட்டுவிட்டனர். இச்சம்பவத்தினுல் உயிர்ச் சேதம் எதுவும் இல்லை. ஆயினும், கீரைகள், காய்கறிகள் போன்றவைகளை வழங்கும் குத்தகைக்காரர் மீதும் சம்பவத்தன்று பாலைக் காய்ச்சிய மருத்துவ மனை சமையற்காரர் மீதும் ஐயம் ஏற்பட்டு காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டு அத்துறையினர் இது குறித்து புலன் ஆய்வு செய்து வருகின்றனர். அத்துறையின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகின்றது.